தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2023–2024)

(பதினாறாவது பேரவை)

ஆறாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : **10–10–2023)**

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2023–2024)

(பதினாறாவது பேரவை)



ஆறாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

பொருளடக்கம்

			பக்கம்
1.	2023–2024 ஆம் ஆண்டிற்கான பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு	..	iii
2.	முகவுரை	..	v

இணைப்பு

1.	**உயர் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அண்ணா பல்கலைக்கழகத்தின்** கீழ்க்கண்ட ஆண்டறிக்கைகள் பேரவை முன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை:–	..	1–4
	2010–2011 முதல் 2017–2018 வரையிலான ஆண்டறிக்கைகள்	..	1–2
2.	**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின்** கீழ்க்கண்ட ஆண்டறிக்கைகள் பேரவை முன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை:	..	5–7
	2017–2018 மற்றும் 2018–2019 ஆகிய ஆண்டறிக்கைகள்	..	5
3.	**நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின்** கீழ்க்கண்ட ஆண்டறிக்கைகள் பேரவை முன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை:	..	8–10
	2015–2016 முதல் 2020–2021 வரையிலான ஆண்டறிக்கைகள்	..	8–9

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2023–2024)

(பதினாறாவது பேரவை)

(2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் அமைக்கப்பெற்றது)

1. ***தலைவர்***

   மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. கி. அசோக்குமார்
3. மாண்புமிகு திரு. T.K. அமுல் கந்தசாமி
4. மாண்புமிகு திரு. ச. அரவிந்த் ரமேஷ்
5. மாண்புமிகு திருமதி கு. சித்ரா
6. மாண்புமிகு திரு. எஸ். தங்கப்பாண்டியன்
7. மாண்புமிகு திரு. S. பழனி நாடார்
8. மாண்புமிகு திரு. K.A. பாண்டியன்
9. மாண்புமிகு திரு. இரா. மாணிக்கம்
10. மாண்புமிகு டாக்டர் A.R.R. ரகுராமன்
11. மாண்புமிகு திருமதி ம. வரலட்சுமி

செயலகம்

முனைவர் கி. சீனிவாசன்	. . .	செயலாளர்
திரு. தே. நாகராஜன்	. . .	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. வ. பூபாலன்	. . .	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கோ. வரதராஜன்	. . .	தலைமை நிருபர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2023–2024)

(பதினாறாவது பேரவை)

ஆறாவது அறிக்கை

முகவுரை

2023–2024 ஆம் ஆண்டிற்கான பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக ஆறாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

2023–2024–ஆம் ஆண்டிற்கான பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 21–04–2023 அன்று அமைக்கப்பெற்றது.

குழுக் கூட்டம்

அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை ஆகியவற்றின் ஆண்டறிக்கைகள், ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கைகள் **பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பெற்றது குறித்து** 7–7–2023 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள் விளக்கம் அளித்தனர். குழுமுன் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரைகள் மற்றும் பரிந்துரைகள் இவ்வறிக்கையின் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளன.

9–10–2023 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை–600 009,
9–10–2023
சோபகிருது– புரட்டாசி –22
திருவள்ளுவர் ஆண்டு 2054

ஆ. தமிழரசி
தலைவர்
பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

இணைப்பு

இணைப்பு

1. உயர் கல்வித் துறை

அண்ணா பல்கலைக் கழகம்

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவை முன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவை முன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
அண்ணா பல்கலைக் கழகம்	2010–2011	31–3–2012	2–9–2016	4 வருடங்கள் 5 மாதங்கள் 1 நாள்
	2011–2012	31–3–2013	20–3–2018	4 வருடங்கள் 11 மாதங்கள் 19 நாட்கள்
	2012–2013	31–3–2014	12–6–2018	4 வருடங்கள் 2 மாதங்கள் 11 நாட்கள்
	2013–2014	31–3–2015	5–1–2019	3 வருடங்கள் 9 மாதங்கள் 4 நாட்கள்

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவை முன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவை முன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
	2014–2015	31–3–2016	10–7–2019	3 வருடங்கள் 3 மாதங்கள் 9 நாட்கள்
	2015–2016	31–3–2017	20–2–2020	2 வருடங்கள் 10 மாதங்கள் 19 நாட்கள்
	2016–2017	31–3–2018	5–2–2021	2 வருடங்கள் 10 மாதங்கள் 4 நாட்கள்
	2017–2018	31–3–2019	18–4–2022	3 வருடங்கள் 17 நாட்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதில் (6)	குழுவின் பரிந்துரை (7)
2010–2011 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையைப் பொறுத்தவரையில், தணிக்கைத் துறை கோரிய விளக்கங்களுக்கு பதிலளித்த பின்னர்தான், ஏறக்குறைய 3 ஆண்டுகள் கழித்துதான் தணிக்கைத் துறையிடமிருந்து அறிக்கை பெறப்பட்டதாலும், அப்போது போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், தமிழில் மொழி பெயர்ப்பதிலும் காலதாமதம் ஏற்பட்டதால் பேரவையில் சமர்ப்பிக்க காலதாமதம் ஆகிவிட்டது. மேலும், 2018–2019 ஆம் ஆண்டிற்கான அறிக்கையை 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலும் மீதமுள்ள ஆண்டறிக்கைகளை இந்த ஆண்டு இறுதிக்குள்ளும் சட்டமன்றத்தில் சமர்ப்பித்துவிடுகிறோம்.	அண்ணா பல்கலைக்கழகத்தின் 2010–2011 முதல் 2017–2018 வரையிலான 8 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் பேரவையில் காலதாமதமாக வைக்கப்பட்டுள்ளன. 2018–2019 முதல் 2021–2022 வரையிலான 4 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் இன்னும் பேரவையில் வைக்கப்படவில்லை.
2021–2022 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை உள்ளாட்சி தணிக்கைத் துறை இன்னும் வழங்கவில்லை. அத்துறை வழங்கியபிறகு உரிய காலத்திற்குள் ஆண்டறிக்கை பேரவையில் சமர்ப்பிக்கப்படும். உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையினர் அறிக்கையை அளித்த பிறகு, துறை தரப்பில் நடவடிக்கை மேற்கொள்வதிலும் காலதாமதம் ஏற்படுகிறது	2021–2022 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை 9 மாதங்களுக்குள் முடித்திருக்க வேண்டும். ஆனால் உள்ளாட்சி தணிக்கைத் துறையிலிருந்து அறிக்கை பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் சிறப்பு இயக்குநர் அறிக்கையை உரிய காலத்தில் அளித்துவிடுவதாகவும், தங்கள் தரப்பில் காலதாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லையெனவும் தெரிவித்துள்ளார்.

2022–2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை பொறுத்தவரையில், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் தற்போது தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வறிக்கையினை 2023 டிசம்பர் மாதத்திற்குள் அளித்துவிடுவதாக அத்துறை தெரிவித்துள்ளது.

துறை காலதாமதமாக அறிக்கை அளிப்பதால்தான் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் ஆண்டறிக்கைகளை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்க முடிவதில்லை.

தமிழில் மொழிபெயர்ப்பு செய்வதற்கு தற்போது சாப்ட்வேர்களை (Softwares) உபயோகப்படுத்துவதால், இனிமேல் காலதாமதம் குறைக்கப்படும்.

உள்ளாட்சி நிதி தணிக்கை துறை உரியகாலத்திற்குள் தணிக்கை செய்து அறிக்கை அளிக்க வேண்டும். துறையும் வருங்காலங்களில் காலதாமதமின்றி அறிக்கையினை பேரவையில் அளிக்க வேண்டும்.

2. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்

வாரியத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவை முன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவை முன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்	2017–2018	31–3–2019	5–2–2021	1 வருடம் 10 மாதங்கள் 4 நாட்கள்
	2018–2019	31–3–2020	6–5–2022	2 வருடங்கள் 1 மாதம் 5 நாட்கள்

துறையின் பதில்
(6)

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் 2017-2018 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தலைமைக் கணக்காய்வுத் தலைவருக்கு அளிக்கப்பட்டு, அதில் சில விளக்கங்களை கோரியுள்ளதால் காலதாமதம் ஏற்பட்டது. 1-11-2018 அன்று கணக்குகளை தணிக்கைத் துறைக்கு, துறையிலிருந்து அனுப்பியும், 20 மாத காலம் தலைமைக் கணக்காயரிடமே இருந்தது.

தணிக்கைத் துறை கோரும் கேள்விகளுக்கு உரிய பதில்களை அனுப்பி, அறிக்கையை பெறுவதில் நீண்ட காலம் தேவைப்படுகிறது. மேலும், அனைத்து மாவட்டங்களிலிருந்தும் கணக்குகளைப் பெற்று தொகுப்பதிலும் தாமதமாகிறது. இதனால்தான், ஆண்டறிக்கைகளை தயார் செய்து பேரவையில் சமர்ப்பிப்பதற்கு மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது.

குழுவின் பரிந்துரை
(7)

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், 2017-2018 மற்றும் 2018-2019 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை காலதாமதாக பேரவையில் வைத்துள்ளது. 2019-2020 முதல் 2021-2022 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் பேரவையில் வைக்கப்படவில்லை.

கணக்குகளைத் தணிக்கை செய்து, பேரவையில் அறிக்கை சமர்ப்பிக்க நிதித் துறை நிர்ணயித்துள்ள காலவரம்புகள் துறையால் பின்பற்றப்படவில்லை. அவற்றைப் பின்பற்ற வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள், துறை கணக்குகளைத் தொகுத்து தணிக்கை செய்து ஒப்புதல் பெற வேண்டும். நிதியாண்டு முடிவடைந்த 4 மாதகாலத்திற்குள் கணக்குகளை இந்தியத் தணிக்கைத் துறைக்கு அனுப்ப வேண்டும்.

2019–2020 முதல் 2021–2022 வரையிலான ஆண்டுகளுக்கான கணக்குகளும் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

2022–2023 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கை முடிந்தநிலையில் இந்திய தணிக்கைத் துறைத் தலைவருக்கு அடுத்த வாரம் அனுப்பப்படும்.

அடுத்தடுத்த வருடங்களில் கண்டிப்பாக நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பிற்குள் ஆண்டறிக்கைகளை அளித்துவிடுவோம்.

சட்டப் பேரவையில் அளிக்கப்படும் ஆண்டறிக்கைகள், துறையின் அனைத்து செயல்பாடுகளையும், புள்ளிவிவரங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். காலதாமத அறிக்கையில் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் ஒப்புதல் பெறப்பட வேண்டும். வருங்காலங்களில் காலதாமதமின்றி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. நிதித் துறை

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

துறையின் பெயர்	நிதியாண்டு	பேரவை முன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவை முன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை	2015–2016	31–3–2017	9–7–2018	1 வருடம் 3 மாதங்கள் 8 நாட்கள்
	2016–2017	31–3–2018	5–2–2021	3 வருடங்கள் 10 மாதங்கள் 4 நாட்கள்
	2017–2018	31–3–2019	13–9–2021	2 வருடங்கள் 5 மாதங்கள் 12 நாட்கள்

துறையின் பெயர்	நிதியாண்டு	பேரவை முன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவை முன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
	2018–2019	31–3–2020	13–9–2021	1 வருடம் 5 மாதங்கள் 12 நாட்கள்
	2019–2020	31–3–2021	24–3–2022	1 வருடம் 11 மாதங்கள் 23 நாட்கள்
	2020–2021	31–3–2022	19–4–2023	1 வருடம் 18 நாட்கள்

துறையின் பதில் (6)	குழுவின் பரிந்துரை (7)
உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கை பேரவையில் வைக்கப்பட வேண்டும் என்று 2014 ஆம் ஆண்டு சட்டம் அமலுக்கு வந்தது. இது புது அமைப்பாக இருந்ததால், அந்த நேரத்தில் ஒருசில காலதாமதம் ஏற்பட்டது. இனிவரும் காலங்களில், காலதாமதத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் 2015–2016 முதல் 2020–2021 வரையிலான 6 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் காலதாமதமாக பேரவையில் வைக்கப்பட்டு இருக்கின்றன. 2021–2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை பேரவையில் வைக்கப்படாமல் உள்ளது.
2021–2022 ஆம் ஆண்டிற்கான அறிக்கையை 2022–2023 ஆம் ஆண்டு முழுவதும் தணிக்கை செய்து, அடுத்த 6 மாதங்களில் கண்டிப்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுவிடும். பொதுவாக, ஒரு நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையை சமர்ப்பிக்க மொத்தமாக 18 மாதங்கள் தேவைப்படுகிறது. 2021–2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை இவ்வாண்டு செப்டம்பர் 30–க்குள் சமர்ப்பிக்கப்பட்டுவிடும்.	நிதித் துறை அளித்துள்ள அறிவுறுத்தலில், ஓர் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை 9 மாதங்களுக்குள் பேரவையில் வைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள நிலையில், மிகவும் காலதாமதமாக அறிக்கை வைக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை சட்டத்தில் 18 மாதங்கள் வரை சட்டத்தில் உள்ளதாக தெரிவிக்கிறார்கள். எனவே, நிதித் துறை இக்காலவரையறை குறித்து ஆய்வு செய்து, மறுபரிசீலனை (revise) செய்து அறிவுரைகளை வழங்க வேண்டும்.
இனிவரும் காலங்களில் தாமதமின்றி அறிக்கைகள் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	இனிவருங்காலங்களில் காலதாமதமின்றி அறிக்கையினை துறை சமர்ப்பிக்க வேண்டும்.

முனைவர் கி. சீனிவாசன்,
செயலாளர்.